بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ

# தராவிஹ் தொழுகை

**(ஆயத்துக்களின் சாராம்சம் - தமிழில்)**

**பகுதி வாரியாக எளிய நடையில்
தமிழில் புரிந்து, உணர்ந்து
இறையச்சத்தோடு தொழுவதற்கு.**

## ஸூரா - 1, அல்ஃபாத்திஹா; வசனம்: 1 - 7; பிரிவு: 1

1. அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகிறேன்).
2. அனைத்துப் புகழும் உலக மக்களைப் படைத்து, பரிபாலிக்கின்ற அல்லாஹ்விற்கே உரியது.
3. அவன் அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.
4. நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதி.
5. உன்னையே நாங்கள் வணங்குகின்றோம். உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.
6. இறைவா! எங்களுக்கு நேர்வழியை காட்டுவாயாக!
7. யார் மீது நீ அருள் புரிந்தாயோ அந்த வழியினை! உன் கோபத்தைச் சம்பாதித்தவர்களின் வழியுமல்ல! வழி தவறியவர்களின் வழியுமல்ல!

## ஒரு பார்வை - பகுதி 1

அல்குர்ஆன் பயபக்தியுடையவர்களுக்கு நேரான வழியை காட்டும். இது இறைநம்பிக்கையாளர்களின் குணாதிசயங்களுக்கும், கா:.பிர்களின் குணாதிசயங்களுக்கும் இடையேயான வேறுபாட்டை தெளிவாக காட்டுகிறது. ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றின் மூலம், அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவன் என்பதையும், ஆணவத்தால் இப்லீஸ் வீழ்ந்ததையும், ஷைத்தானின் ஆசை வார்த்தைகளால் தவறிழைத்த ஆதம் (அலை), பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டு மனந்திருந்தியதையும் அறியமுடிகிறது.

## தராவிஹ் - 1: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 1 - 39; பிரிவு: 1 - 4

1. அலி:.ப்; லாம்; மீம்! இது இறைவேதம். இதில் சந்தேகமேயில்லை. இது பயபக்தியுடையவர்களுக்கு நேரான வழியை காட்டும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 1)

2. (பயபக்தியுடையவர்களான) அவர்கள் மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்வார்கள். தொழுகையை நிலைநிறுத்துவார்கள். அல்லாஹ் கொடுத்தவற்றிலிருந்து தானம் செய்வார்கள். இந்த குர்ஆனையும், இதற்குமுன் இருந்த நபிமார்களுக்கு இறக்கியருளப்பட்ட வேதங்களையும் நம்புவார்கள். நியாயத்தீர்ப்பு நாளையும் உறுதியாக நம்புவார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 1)

3. இந்த வேதத்தை நிராகரிப்பவர்களின் இதயங்களில், வஞ்சகம் என்ற நோய் உள்ளது. அதை அல்லாஹ் அதிகப்படுத்தி விட்டான். அவர்கள் பொய் சொல்வதனால், மிக்க துன்புறுத்தும்

வேதனையும் அவர்களுக்கு உண்டு. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 2)

4. அத்துடன், அவர்கள் செவிடர்களாகவும், ஊமையர்களாகவும், குருடர்களாகவும் ஆகிவிட்டார்கள். ஆதலால், அபாயகரமான இந்நிலையிலிருந்து மீளவே மாட்டார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 2)

5. எவர்கள் இவ்வேதத்தை நம்பி, நற்செயல்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்கு சொர்க்கமும், அங்கு அவர்கள் உண்பதற்காக கனிவர்க்கங்களும், பரிசுத்தமான மனைவியர்களும் நிரந்தரமாகக் கொடுக்கப்படும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 3)

6. அல்லாஹ்தான் பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் மற்றும் ஏழு வானங்களையும் படைத்தான். யாவற்றையும் அவனே நன்கறிந்தவனாகவும் இருக்கிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 3)

7. இறைவன் பூமியில், தான் மனிதர்களைப் படைக்க இருப்பதாகக் கூறியபோது, மலக்குகள் அதைக்கேட்டுத் தயங்கியவர்களாக, ‘இம்மக்கள் பூமியில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக்கூடியவர்களாக இருப்பார்களே! இவர்களையா நீ படைக்கப் போகிறாய்?’ எனக் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ், "நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்" எனக் கூறினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

8. அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களுக்கு எல்லாப் பொருட்களின் பெயர்களையும் கற்றுக்கொடுத்தான். பின்னர் அவற்றின் பெயர்களை “நீங்கள் எனக்குக் கூறுங்களேன்” என்று மலக்குகளிடம் கேட்டான். அவர்களால் அவற்றைக் கூறமுடியவில்லை. எனவே, மலக்குகள் அல்லாஹ்விடம், ‘நீ எங்களுக்கு அறிவித்ததைத் தவிர வேறெதையும் நாங்கள்

அறியோம்' என்று பதிலளித்தார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

9. ஆனால், ஆதம் (அலை) அவர்கள், எல்லாப் பெயர்களையும் கூறி, அல்லாஹ்வின் மகிமையை வெளிப்படுத்தினார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

10. அல்லாஹ் மலக்குகளை நோக்கி, 'நான் வானம், பூமியிலுள்ள மறைவானவற்றை நன்கு அறிந்தவன். அதேபோல் நீங்கள் வெளிப்படுத்துவதையும், மறைத்துக் கொண்டிருந்தவற்றையும் நான் நன்கு அறிவேன்' என்று கூறினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

11. மலக்குகளை நோக்கி அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களுக்கு ஸூஜூது செய்யக் கூறினான். இப்லீஸைத்தவிர, அனைவரும் ஸூஜூது செய்தனர். இப்லீஸ் தனது ஆணவத்தினால் நிராகரிப்பவர்களில் ஒருவனாக ஆகிவிட்டான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

12. பின்பு அல்லாஹ், ஆதம் (அலை) அவர்களை, அவரது மனைவியுடன் சொர்க்கத்தில் வசிக்க அனுமதித்தான். அவர்களை ஒரு மரத்திலுள்ள பழங்களைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் புசிக்க அனுமதித்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

13. ஆயினும், ஷைத்தான் அவர்களைத் தவறிழைக்கச் செய்துவிட்டான். அதனால், அல்லாஹ் அவர்களை பூமிக்கு அனுப்பி, அங்கு வசிக்கும்படி உத்தரவிட்டான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

14. பின்னர் ஆதம் (அலை) அவர்களுக்கு பாவமன்னிப்புக் கோருவதற்கான சொற்களை அல்லாஹ் கற்றுக் கொடுத்தான். அவர்களும் அவற்றைக் கொண்டு அல்லாஹ்விடம்

மன்னிப்புக் கோரினார்கள். அல்லாஹ் அவர்களுடைய பிரார்த்தனையை ஏற்று, மன்னித்து விட்டான். நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்போனும், அளவற்ற அன்புடையோனுமாக இருக்கிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு அல்லாஹ் வழங்கிய அருட்கொடைகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது. ஃபிர்அவ்னிடமிருந்து அம்மக்களை காப்பாற்றியது, மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதத்தை வழங்கியது மற்றும் தண்ணீர் தேவைப்பட்டபோது ஒரு பாறையிலிருந்து பன்னிரண்டு நீரூற்றுகளை உருவாக்கியது போன்ற அற்புதங்களை அல்லாஹ் இங்கு நினைவுபடுத்துகிறான். மேலும் முந்தைய தவ்ராத் வேதத்தை உண்மைப்படுத்தும் இந்த குர்ஆனை அவர்கள் நம்பவேண்டும் என்றும், அதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களாக ஆகிவிட வேண்டாம் என்றும் எச்சரிக்கிறான்.

## தராவிஹ் - 1: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 40 - 71; பிரிவு: 5 - 8

1. அல்லாஹ், இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு தான் வழங்கிய அருட்கொடைகளைப் பற்றிக் கூறுகிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 5)

2. இஸ்ராயீல் என்றால் 'அல்லாஹ்வின் அடிமை' என்றுபொருள். அது நபி யாகூப் (அலை) அவர்களின் மற்றொரு பெயரும் கூட. நபி யாகூப் (அலை) அவர்களின் தந்தை நபி இஸ்ஹாக் (அலை) அவர்களும், அவரது பாட்டனார் நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் ஆவர். அவர்களுக்கு 12 குழந்தைகள் இருந்தனர். அதன் மூலம் 12 குலத்தார்கள் தோன்றினர். அவர்களே 'பனூ இஸ்ராயீல்', அதாவது 'இஸ்ராயீலின் சந்ததிகள்' என அழைக்கப்பட்டனர்.

3. இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு அல்லாஹ், அவன் இறக்கியருளியுள்ள குர்ஆனை நம்புமாறும், அதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களாக ஆகிவிட வேண்டாம் என்றும்

கூறுகிறான். மேலும் இந்த குர்ஆன் முந்தைய தௌராத் வேதத்தை உண்மைப்படுத்துகிறது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 5)

4. “இஸ்ராயீலின் சந்ததிகளே!” என்று அன்றைய யூதர்களை அழைத்து அவர்கள் தமது வரலாற்றில் சந்தித்த பல்வேறு நிகழ்ச்சிகளையும், அல்லாஹ் அவர்களுக்குச் செய்த உதவியையும் நினைவு கூறுகிறான்.

5. பிர்அவ்ன் அம்மக்களுக்கு செய்த கொடுமையையும், அல்லாஹ் ஏற்படுத்திய சோதனையையும் நினைவு கூறுகிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 6)

6. மூஸா (அலை) அவர்கள் தவுராத் வேதத்தைப் பெற்றுக் கொண்டு வருவதற்கு 40 இரவுகள் தூர்சீனாவுக்கு சென்றபோது, மக்கள் இறைவரம்பை மீறி ஒரு காளைக் கன்றை தெய்வமாக வணங்கினர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 6)

7. மக்கள் நேர்வழி பெறும் பொருட்டு, மூஸா (அலை) அவர்களுக்கு தவுராத் என்ற வேதத்தை வழங்கினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 6)

8. அவர்களுக்கு தண்ணீர் தேவைப்பட்டபோது, மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி தமது தடியால் அடிக்க, 12 ஊற்றுக்களை அல்லாஹ் உருவாக்கினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 7)

9. ‘தூர்’ மலையை உயர்த்தி, அல்லாஹ் வாக்குறுதி வாங்கிய சமயத்தில், தவ்ராத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறினான். அதன் காரணமாக அவர்கள் தூய்மை அடைவார்கள் எனக் கூறினான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 8)

10. மூஸா (அலை) மூலம் அல்லாஹ் ஒரு மாட்டை அறுக்கும்படி மக்களுக்குக் கட்டளையிட்டான். மக்களில் சிலர் அதை ஏற்க மறுத்துப் பரிகாசித்தார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 8)

11. மக்கள் மாட்டைப் பற்றியும், அதன் வயது, நிறம் பற்றியும் திரும்பத் திரும்பக் கேட்டு, கேலியும் கிண்டலும் செய்தனர். அதிகமாகக் கேள்விகள் கேட்டதால் அதிக நிபந்தனைகளுடன் கூடிய ஒரு மாட்டை சிரமப்பட்டுத் தேடிக்கண்டுபிடித்து அறுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு தமக்குத் தாமே சிரமத்தை ஏற்படுத்திக் கொண்டனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 8)

## **ஒரு பார்வை - பகுதி 3**

**அல்லாஹ்விடமிருந்து வந்த பல அற்புதங்களைப் பார்த்திருந்தும், இஸ்ராயீலின் சந்ததியினர் தங்கள் இதயங்களை இறுகிய பாறை போல் கடினப்படுத்திக் கொண்டனர். தனிப்பட்ட லாபத்திற்காக தங்கள் சொந்த வேதத்தில் திருத்தம் செய்து அதை சிதைத்தனர். குர்ஆன் ஓர் அரேபியருக்கு அருளப்பட்டதால் அதை நிராகரிக்கிறார்கள். அவர்களில் பலர் மறுமையின் விளைவுகளை அலட்சியம் செய்து சூனியத்தின் பக்கம் திரும்பினார்கள்.**

## **தராவிஹ் - 1: (ரக்அத் 9 முதல் 12)**

### **ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 72 - 103; பிரிவு: 9 - 12**

1. **இஸ்ராயீலின் சந்ததியரில் ஒருவர் ஒரு கொலை செய்துவிட்டார். கொன்றவர் யார் என்பதில் மக்களிடையே சச்சரவு ஏற்பட்டு மோதல் வலுத்தது. அல்லாஹ் ஒரு மாட்டை அறுக்கச் சொல்லி, அதைக் கொண்டு கொல்லப்பட்டவரின் உடலில் அடிக்கச் செய்து, அவரை உயிராக்கி, கொலைகாரர் யார் என்று அவர் வாயாலேயே சொல்ல வைத்தான். இவ்வாறே அல்லாஹ், இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 9)**

2. **இவை அனைத்தையும் செய்தும், அம்மக்களின் இதயம் இறுகிய பாறை போல் கல்லாக இருந்தது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 9)**

3. **இஸ்ரவேலர்களின் பாதிரிகள் அவர்களின் இறைவேதத்தில் தமது கரங்களால் திருத்தம் செய்து எழுதியவற்றை, “இவை அல்லாஹ்விடமிருந்து வந்தவை” எனக் கூறி மக்களை ஏமாற்றினர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 9)**

4. ஆதலால், அவர்களுக்கு இவ்வுலகில் இழிவும், மறுமையில் கடுமையான வேதனையும் உண்டு. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 10)

5. குர்ஆன் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது இறங்கியதால் இஸ்ரவேலர்கள் (அவர்கள் காலத்தில் வாழ்ந்த யூதர்கள்) அதை நிராகரித்தனர். இறைத் தூதுத்துவப் பதவி அரபியர் ஒருவருக்கு வழங்கப்பட்டதை ஏற்றுக் கொள்ள அவர்களுக்கு மனம் வரவில்லை. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 11)

6. இறுதியாக அருளப்படயிருந்த சத்திய வேதமான திருக்குர்ஆனை அவர்கள் எதிர்பார்த்து இருந்தாலும், அதனை ஏற்க முடியாது எனக்கூறி அதை எதிர்த்தனர். இத்தகைய இறைமறுப்பாளர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 11)

7. மேலும் அந்த யூதர்கள் சுலைமான் (அலை) அவர்களுடைய ஆட்சியைப் பற்றி ஷைத்தான் கூறிய தவறான கருத்துக்களை நம்பினர். ஆனால், சுலைமான் (அலை) மிகவும் நல்லவர்களாக, இறைத்தூதராக இருந்தார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 12)

8. அம்மக்கள் ஷைத்தான் கற்றுக்கொடுத்த சூனியத்தைப் பின்பற்றினர். அதன்மூலம் சுலைமான் (அலை) அவர்களுடைய ஆட்சிக்கு 'நிராகரிப்பவர்' என்ற களங்கத்தை உருவாக்கினர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 12)

9. சூனியம் என்பது ஹாரூத் மற்றும் மாரூத் எனும் இரு மலக்குகளுக்கு பாபிலூன் என்ற ஊரில் இறக்கப்பட்டது. மக்களை சோதிப்பதற்காகவே, அல்லாஹ் இதனைச் செய்தான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 12)

10. அவ்விரு மலக்குகள் தம்மிடம் சூனியத்தை கற்க வந்த மனிதர்களிடம், 'இதைக் கற்காதீர்கள்; காஃபிர்களாகி விடுவீர்கள்' என்றனர். ஆனால் அம்மக்கள், கணவன்

மனைவிக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணும் சூனிய வித்தையைக் கற்றுக் கொண்டனர். அல்லாஹ்வின் அனுமதியின்றி அந்த சூனியத்தைக் கொண்டு எவருக்கும் அவர்களால் தீங்கிழைக்க முடியாது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 12)

11. இவ்வாறாக ஒரு மோசமான விலைக்கு அவர்கள் தங்களையே விற்று விட்டனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 12)

## ஒரு பார்வை - பகுதி 4

**முந்தைய வேதங்களைக் கொண்ட பெரும்பாலான யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், பொறாமையின் காரணமாக உண்மையான விசுவாசிகளை நிராகரிப்போராக மாற்றிவிட விரும்புகிறார்கள். இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகிய இரு இறைத் தூதர்களும் மக்காவை ஒரு பாதுகாப்பான நகரமாக இருக்க பிரார்த்தனை செய்தனர்; கஃபாவின் அடித்தளத்தை உயர்த்தினர். மேலும் தங்கள் பரம்பரையிலிருந்து ஒரு நபியை அல்லாஹ்விடம் கேட்டார்கள். இந்த துஆவின் பதிலாக, அல்லாஹ் நம் அன்பிற்குரிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வுலகுக்குக் கொடுத்தான்.**

## தராவிஹ் - 1: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 104 - 141; பிரிவு: 13 - 16

1. **முந்தைய வேதங்களைக் கொண்ட பெரும்பாலோர், பொறாமையின் காரணமாக விசுவாசிகளாகிய உங்களை நிராகரிப்போராக மாற்றிவிட விரும்புகிறார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 13)**

2. **நீங்கள் தொழுகையைக் கடைப்பிடித்தும், ஜகாத் கொடுத்தும் வாருங்கள். அது உங்களுக்கு மறுமையில் பலனைக் கொடுக்கும். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 13)**

3. **'குன்பயகூன்' - அல்லாஹ் எதைப் படைக்க நாடினாலும், அதனை 'ஆகுக' எனக் கூறினால், அது ஆகிவிடுகிறது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 14)**

4. **'அல்லாஹ் நம்மோடு நேரடியாகப் பேச வேண்டாமா?' என அறிவு இல்லாதோர் கேட்கின்றனர். விசுவாசம் கொள்ளும் மக்களுக்கு நம்முடைய அத்தாட்சிகளை நிச்சயமாக நாம் இந்த**

வேதத்தின் மூலம் தெளிவாக்கியிருக்கிறோம். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 14)

5. அல்லாஹ்வின் ஆணைக்கு இணங்க இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) அவர்கள் திருமக்காவிலுள்ள க\:அபாவை (இணைவைப்பிலிருந்து) பரிசுத்தமானதாகப் பராமரித்தார்கள். இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்விடம் மக்காவை ஒரு பாதுகாப்பான நகரமாக இருக்கவும், பலவகை கனிகள், உணவுகளை அதிலுள்ள மக்களுக்கு அளிக்கவும் வேண்டினார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 15)

6. இப்ராஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை) ஆகிய இரு இறைத் தூதர்களும் க\:அபாவைக் கட்டி முடித்தபின், இந்த துஆவை ஓதினார்கள். 'இறைவா! இந்த வீட்டை நீ ஏற்றுக் கொள்வாயாக! எங்களையும், எங்கள் சந்ததியர்களையும், முஸ்லிம்களாக ஆக்கிவைப்பாயாக! நாங்கள் புரியவேண்டிய வணக்கங்களை அறிவிப்பாயாக! எங்களது தவறுகளை மன்னிப்பாயாக! நிச்சயமாக நீ மிகமன்னிப்போனும், அளவற்ற அன்புடையோனுமாக இருக்கின்றாய்.' (ஸூரா - அல்பகரா; பிரிவு: 15)

7. எங்கள் இறைவா! எங்கள் வழித்தோன்றல்களில் இருந்து ஒரு தூதரை நீ அனுப்புவாயாக! அவர் உன் வேதவசனங்களை அவர்களுக்கு ஓதிக்காட்டுவார். வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக்கொடுத்து, அவர்களைத் தூய்மைப்படுத்துவார். (இந்த துஆவை ஏற்று அல்லாஹ், பெருமானார் (ஸல்) அவர்களை இவ்வுலகுக்கு அனுப்பினான்.) (ஸூரா - அல்பகரா; பிரிவு: 15).

8. முந்தைய நபிமார்களின் சமுதாயத்தினர் செய்த செயல்களின் பலன் அவர்களுக்கு! உங்களது செயல்களின் பலன் உங்களுக்கு! அவர்கள் செய்தவற்றிக்காக உங்களிடம் கேட்கப் படமாட்டாது. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 5

**அல்லாஹ், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, மஸ்ஜிதுல் ஹராமை நோக்கி முகத்தைத் திருப்பி தொழச்செய்தான். வேதங்கள் கொடுக்கப்பட்ட யூத, நஸராக்கள் இந்த குர்ஆனை உண்மை என்று அங்கீகரிக்கிறார்கள்; ஆனால் அவர்களில் ஒரு பிரிவினர் அதை மக்களிடமிருந்து மறைக்கிறார்கள். விசுவாசிகள் பொறுமையாக இருக்கவும், அல்லாஹ்வின் வழிகாட்டுதலைப் பின்பற்றவும், ஹலாலானதை மட்டுமே சாப்பிடவும் வலியுறுத்தப்படுகிறார்கள்.**

## தராவிஹ் - 1: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 2, அல்பகரா; வசனம்: 142 - 176; பிரிவு: 17 - 21

1. **கிழக்கு, மேற்குத் திசைகள் அனைத்தும் அல்லாஹ்விற்கே உரியன. அவன் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துவான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 17)**

2. **அல்லாஹ், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை, மஸ்ஜிதுல் ஹராமை நோக்கி முகத்தைத் திருப்பி தொழச்செய்தான். (இதற்கு முன்பு ஜெருசலத்தில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவே கிப்லாவாக, முன்னோக்கித் தொழும் இடமாக இருந்தது. ஆயினும், தமது கிப்லா, மக்காவிலுள்ள கஃஅபாவை நோக்கி இருக்கவேண்டும் என்பது நபி (ஸல்) அவர்களின் விருப்பமாக இருந்தது). (ஸூரா - அல்பகரா; பிரிவு: 17)**

3. **வேதங்கள் கொடுக்கப்பட்டவர்கள் (யூத, நஸராக்கள்) தம் பிள்ளைகளை அறிவதைப் போன்று, இந்த இறைத்தூது உண்மை என்று அறிந்திருந்தனர். ஆயினும் அவர்களில் ஒரு பிரிவினரான பாதிரிமார்கள் தவராத் மற்றும் இன்ஜீலில் கூறப்பட்டுள்ள இந்த உண்மையை மக்களிடமிருந்து மறைக்கின்றனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 17)**

4. அல்லாஹ் கூறுகிறான்: “உலகில் எங்கிருந்தாலும், நீங்கள் மஸ்ஜிதுல் ஹராமை நோக்கி முகத்தைத் திருப்பித் தொழுவீராக!” (ஸூரா - அல்பகரா; பிரிவு: 18)

5. “நீங்கள் என்னை தியானித்துக் கொண்டு இருங்கள். நான் உங்களுக்கு அருள்புரிவேன். நீங்கள் எனக்கு நன்றி செலுத்தி, நிராகரிக்காமல் இருங்கள்”. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 18)

6. பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ், பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 19)

7. பயம், பசி, பொருட்களின் இழப்பு, உயிர்ச் சேதம் ஆகியவை கொண்டு அல்லாஹ், நம்மை சோதிப்பான். அதை சகித்துக் கொண்டோருக்கு நன்மை உண்டாகும். பொறுமையுடன் அவற்றை சகித்துக் கொள்வோர், “நிச்சயமாக நாம் அல்லாஹ்விற்காகவே இருக்கின்றோம். நாம் அவனிடமே மீளுவோம்” எனக் கூறுவர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 19)

8. அல்லாஹ்வின் வேதத்தைப் பின்பற்றுங்கள் எனக் கூறினால், மக்களில் சிலர் “எங்கள் மூதாதையர்கள் பின்பற்றிய மார்க்கத்தைத் தான் நாங்கள் பின்பற்றுவோம்” என்கின்றனர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 21)

9. ஹலால் உணவை உண்ணுங்கள். செத்தது, இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹ் பெயர் கூறி அறுக்கப்படாதவை ஆகியவற்றைப் புசிக்க வேண்டாம். அவை ஹராம் - தடை செய்யப்பட்டவை. (ஸூரா - அல்பகரா; பிரிவு: 21)

10. எவர்கள் அல்லாஹ்வின் வேதத்தில் உள்ளதை மறைத்து, அதற்குப் பகரமாக சொற்பத் தொகையைப் பெற்றுக்கொள்கிறார்களோ, அவர்கள் தங்கள் வயிற்றில்

நெருப்பையே நிரப்பிக் கொள்கின்றார்கள். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 21)

11. எவர்கள் வேதத்தை தர்க்கம் செய்கிறார்களோ, அவர்கள் சத்தியத்தை விற்று விட்டு அதற்குப் பகரமாக வழிகேட்டையும், தண்டனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டவர்கள் ஆவர். (ஸூரா - அல்பகரா; பிரிவு: 21)

--------------------------------------------------------------------